மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கிற வரையில் சட்டமன்றம் நீடித்துக் கொண்டே இருக்கிறது என்று பொருள் ப்ரொரோக் என்று சொல்லிவிட்டால் அது இல்லை.

(உ) அமைச்சர் சுற்றுப்பயண விவர அறிவிப்பு

திரு மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், எம்.ஏ., பி.டி., பி.எல்., அவர்களின் சுற்றுப்பயண விவரம்—6-4-1982 செவ்வாய்க்கிழமை காலை சென்னையிலிருந்து புறப்பட்டு, விமானத்தில் புறப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் என்ன விஷயம் என்பதை மட்டும் சொல்லுங்கள். அமைச்சர் சுற்றுப் பயணம் போகக் கூடாது என்று சொல்லுகிறீர்களா?

திரு மு. அம்பிகாபதி ; இது யாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் திரு. வி. வால்மீகி, என்.பி.எல். தெரு, நெற்குப்பை, திருப்பத்தூர் தாலுக்கா, இராமநாதபுரம் டிஸடிரிக்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் மறைந்து விட்டார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகச் சொல்லுகிறார்கள். வேண்டுமானால் அந்த அலுவலகத்திலே சொல்லி அந்தத் தவறை நீக்கி விடலாம்; ஏற்பாடு செய்து விடலாம்.

(ஊ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு து. இராசரத்தினம் ; மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஏற்கனவே, 2-ஆம் தேதி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு அவை இறுதி நாளாக இருப்பதால் அது எடுத்துக்கொள்ளப்படாமல் விடுபடுமேயானால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். 22-ஆம் தேதி பட்டாபிராம் கலவரம் காரணமாக மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கொட்டகைகள் எரிந்திருக்கின்றன; வைக்கோல் போர்கள் எரிந்திருக்கின்றன. இதுவரையில் சர்க்கார் மூலம் எந்த உபகாரமும் செய்யப்படவில்லை. உபகாரம் செய்யத்தான் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். அதை அருள் கூர்ந்து எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS